# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டம்

---

*(2005 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2005, ஓகத்து மாதம் 12 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** *II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

---

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 13.75** **தபாற் செலவு : ரூபா 7.50**

## *2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டம்*

[*2005 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ–ஓ. 43/2000*
*4722*

**பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குவதன் மீதான சமவாயத்துக்குப் பயன்கொடுப்பதற்கும் ; அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

*பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குவதன்மீதான சர்வதேச சமவாயமொன்று (இது இதனகத்துப்பின்னர் "சமவாயம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதாம் ஆண்டு திசெம்பர் மாதம் ஒன்பதாம் நாளன்று ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஈராயிரமாம் ஆண்டு சனவரி மாதம் பத்தாம் நாளன்று கையொப்பத்துக்காக இடப்பட்டதாதலாலும் :* முன்னுரை.

*அத்துடன் இலங்கை அரசாங்கம் ஈராயிரமாம் ஆண்டு சனவரி மாதம் பத்தாம் நாளன்று மேற்கூறப்பட்ட சமவாயத்துக்கான கையொப்பதாரராக வந்து ஈராயிரமாம் ஆண்டு செத்தெம்பர் மாதம் எட்டாம் நாளன்று அதனை உறுதிப்படுத்தியதாதலாலும்:*

*அத்துடன் மேற்கூறப்பட்ட சமவாயம், ஈராயிரத்து இரண்டாம் ஆண்டு ஏப்பிறல் மாதம் பத்தாம் நாளன்று இலங்கை தொடர்பில் வலுவுக்கு வந்துள்ளதாதலாலும் :*

*அத்துடன் மேற்கூறப்பட்ட சமவாயத்தின்கீழ் இலங்கைக்குள்ள கடப்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் சட்டவாக்க ஏற்பாட்டைச் செய்வது அவசியமாகவுள்ளதாதலாலும் :*

*ஆகவே, இப்பொழுது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—*

***1.*** *இச்சட்டம் 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.* சுருக்கப் பெயர்.

2 –PL 000368– 1,250 (2005/06)

சமவாய அரசுகள்.

**2.** அமைச்சர் காலத்துக்குக்காலம், கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம், சமவாயத்துக்கான திறத்தவர்களாகவுள்ள அரசுகளை சான்றுப்படுத்தலாம். எந்த அரசு தொடர்பில் இப்பிரிவின்கீழ் கட்டளையொன்று ஆக்கப்படுகின்றதோ அந்த அரசு இதனகத்துப்பின்னர் “ஒரு சமவாய அரசு” எனக் குறிப்பீடு செய்யப்படும்.

தவறுகள்.

**3.** (1) எவ்வழிவகைகள் மூலமும், நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ, சட்டவிரோதமாகவும் வேண்டுமென்றும் —

(அ) இதற்கான 1 ஆம் அட்டவணையிற் குறித்துரைக்கப்படும் பொருத்தனைகளுள் ஏதேனுமொன்றின் நோக்கெல்லைக்குள் அல்லது வரைவிலக்கணத்தினுள் தவறொன்றாக அமைகின்ற ஒரு செயலை ;

(ஆ) ஆயுதமேந்திய மோதல் நிலைமையொன்றில், பொதுமகன் ஒருவருக்கு அல்லது பகைமைகளில் தீவிரமான பங்கெடுக்காத வேறெவரேனுமாளுக்கு மரணத்தை அல்லது பாரதூரமான உடலூறுபாட்டை விளைவிக்க உட்கருத்துக்கொண்ட, அத்தகைய செயலின் நோக்கம், அதன் தன்மையினால் அல்லது சந்தர்ப்பத்தினால், ஏதேனும் செயலைச் செய்வதற்கு அல்லது செய்யாது தவிர்ப்பதற்கு ஒரு குடிசனத்தை அச்சுறுத்துவதாக அல்லது ஓர் அரசாங்கத்தை அல்லது சர்வதேச ஒழுங்கமைப்பை வலுக்கட்டாயப்படுத்துவதாக உள்ள வேறேதேனும் செயலை,

புரிவதற்கு, எவையேனும் நிதிகள் முழுமையாக அல்லது பகுதியளவில் பயன்படுத்தப்படவேண்டும் என்ற உட்கருத்துடன் அல்லது அவை பயன்படுத்தப்படவுள்ளன அல்லது அவை பயன்படுத் தப்படக்கூடிய சாத்தியமுள்ளது என நம்புவதற்கு ஏது உள்ளது என அறிந்துகொண்டு அத்தகைய நிதிகளை வழங்குகின்ற அல்லது சேகரிக்கின்ற எவரேனுமாள், பயங்கரவாதிகளுக்கு அல்லது பயங்கரவாத ஒழுங்கமைப்புகளுக்கு நிதியளித்தல் என்ற தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் :

ஆயின், செயலொன்று, மேலே தரப்பட்டுள்ள தவறாக அமைவதற்கு, சேகரிக்கப்பட்ட நிதிகள் உள்ளபடியாகவே தவறொன்றைப் புரிவதில் பயன்படுத்தப்பட்டன என்பதைக் காட்டுவது அவசியமானதாதலாகாது.

(2) பயங்கரவாதிகளுக்கு அல்லது பயங்கரவாத ஒழுங்கமைப்பு களுக்கு நிதியளித்தல் என்ற தவறை –

(அ) புரிய எத்தனிக்கின்ற ;

(ஆ) புரிவதில் உதவுகின்ற அல்லது உடந்தையாகவிருக் கின்ற ; அல்லது

(இ) இன்னோராளுடன் அல்லது ஆட்கள் தொகுதியுடன் பொதுவான நோக்கமொன்றுடன் செயலாற்றி, புரிவ தற்கு உதவுகின்ற,

எவரேனுமாள், இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்ற வாளியாதல் வேண்டும்.

இவ்வுட்பிரிவில் "உடந்தை" என்பது, தண்டனைச் சட்டக் கோவை 100 ஆம், 101 ஆம் பிரிவுகளில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டுள்ளது.

(3) ஓராம் பந்தியில் அல்லது (2) ஆம் பந்தியில் குறிக்கப்பட்ட தவறொன்று ஓர் ஆட்கள் குழுவினால் புரியப்படுமிடத்து, அப்போது, அத்தகைய ஆட்கள் குழுவின் ஒவ்வோர் உறுப்பின ரும், பணிப்பாளரும், முகாமையாளரும், செயலாளரும், அலுவலரும் அல்லது சேவையாளரும், தவறானது அவர் அறியா மல் புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறு புரியப்படு வதனைத் தடுப்பதற்கு உரிய விழிப்புக்கவனம் எல்லாவற்றையும் அவர் பிரயோகித்தனரென எண்பிக்கமுடியுமாக இருந்தாலொழிய அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாகவுள்ள ஆளொருவர், மேல்நீதிமன்றத்தினால், குற்றப்பகர்வின் மீதான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், பதினைந்து ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளை விஞ்சாததுமான காலத்துக்கான மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் குற்றப்பணமொன் றுக்கு ஆளாதலும் வேண்டும்.

முடக்குதலும் கைப்பற்றுதலும்.

**4.** (1) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்காக மேல்நீதிமன்றத்தில் எவரேனும் ஆளுக்கெதிரான குற்றப்பகர்வின்மீது 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீறி சேகரிக்கப்பட்ட நிதிகள் யாவும், அத்தகைய குற்றப் பகர்வு கோப்பிடப்படுகின்ற திகதியிலிருந்து பயனுறுவதாக —

(அ) அத்தகைய நிதிகள் ஏதேனும் வங்கியில் கணக்கொன்றில் இருக்குமாயின் முடக்கல் கட்டளை ஒன்றிற்கு அமைவானதாதல் வேண்டும் ; அல்லது

(ஆ) அத்தகைய நிதிகள் எவரேனும் ஆளின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் இருக்குமாயின் கைப்பற்றப்படுவதற்கு இலக்காதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நியதிகளின்படி நிதிகளை முடக்குதல் அல்லது கைப்பற்றுதல் விளக்கம் முடிவுறும்வரை வலுவிலிருத்தல் வேண்டும்.

(3) குற்றப்பகர்வைக் கோப்பிடுவதன்மேல் சட்டத்துறை தலைமையதிபதி, விடயத்திற்கேற்ப, முடக்குதல் அல்லது கைப் பற்றுதல் பற்றி மத்தியவங்கிக்கு அறிவித்தல் வேண்டும்.

(4) மத்தியவங்கி, அது தகுதியானதென எண்ணக்கூடியவாறாக விடயத்திற்கேற்றவாறு, முடக்குதல் அல்லது கைப்பற்றுதல் கட்டளைக்கு போதுமான விளம்பரத்தைக் கொடுப்பதற்கு அதன்மேல் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

இழுப்பிக்கப்படுதல்.

**5.** (1) மூன்றாம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் எவரேனும் ஆள் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் நீதிமன்றமானது 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினைப் பின்பற்றி சேகரிக்கப்பட்ட எவையேனும் நிதிகள் அரசுக்கு இழுப்பிக்கப்படுதல் வேண்டும் என கட்டளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அரசுக்கு இழுப்பிக்கப்பட்ட எவையேனும் நிதிகள் அரசிற்கு முற்றுமுழுதாக உரித்தாதல் வேண்டும். அத்தகைய உரித்தாக்குகையானது —

(அ) இழுப்பித்தற் கட்டளைக்கு எதிராக மேன்முறையீடெதுவும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு செய்யப்படாத

விடத்தும், அத்தகைய இழப்பித்தற் கட்டளை எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு எந்தக் காலப்பகுதியினுள் மேன்முறையீடொன்று செய்யப்படலாமோ அந்தக் காலப்பகுதி காலாவதியானதன் மீதும் ;

(ஆ) மேன்முறையீடொன்று அத்தகைய இழப்பித்தற் கட்டளைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு செய்யப்பட்டுள்ளவிடத்தும், அத்துடன் அத்தகைய இழப்பித்தற் கட்டளையை உறுதிப்படுத்தும் அல்லது நிலைநாட்டும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளைக்கு எதிராக உயர்நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு எதுவும் செய்யப்படாதவிடத்தும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அத்தகைய கட்டளையில் இருந்து உயர் நீதிமன்றத்திற்கு, எந்தக் காலப்பகுதியினுள் மேன்முறையீடு ஒன்று செய்யப்படலாமோ அந்தக் காலப்பகுதி காலாவதியாவதன்மீது ;

(இ) மேன்முறையீடொன்று அத்தகைய இழப்பித்தற் கட்டளைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு செய்யப்பட்டுள்ளவிடத்தும் அத்துடன் முதலாவது குறிப்பிடப்பட்ட மேன்முறையீட்டின்மீது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்மானத்திலிருந்து உயர்நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளவிடத்தும், இழப்பித்தல் கட்டளையை உறுதிப்படுத்தும் அல்லது நிலைநாட்டும் உயர்நீதிமன்றத்தின் தீர்மானம் மீதும்,

பயனுறுதல் வேண்டும்.

(3) நீதிமன்றமானது, ஏதேனும் வங்கியில் ஏதேனும் கணக்கில் வரவில் இருக்கும் எவையேனும் நிதிகள் அத்தகைய குற்றத்தின் வருவாயாக இருக்கின்றதென 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான தவறொன்றுக்கான விளக்கமொன்றில் எடுத்தாளப்பட்ட சான்றின்மீது திருப்தியுறுகின்றவிடத்து, அது விளக்கத்தின் முடிவுவரை, அக்கணக்கிலிருந்து எவையேனும் நிதிகளை மீளப்பெறுவதை அனுமதிக்கவிடாது அல்லது அதற்கு இடமளிக்காது அத்தகைய வங்கியின் முகாமையாளரை எழுத்திலான கட்டளை மூலம் தடைசெய்யலாம்.

*மேல்நீதி மன்றம் இச்சட்டத்தின் கீழான தவறுகளை விளங்குதல்.*

**6.** (1) கொழும்பில் நடாத்தப்படும் இலங்கை மேல் நீதிமன்றம் அல்லது அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட கொழும்பில் நடாத்தப்படும் மேல் மாகாணத்திற்கான மேல் நீதிமன்றம், வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், இச்சட்டத்தின் கீழான தவறுகளை விளங்குவதற்கு புறநீங்கலான நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றாக அமைகின்ற செயலொன்று இலங்கைக்கு வெளியே புரியப்படுகின்றவிடத்து, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட மேல் நீதிமன்றம் —

(அ) அத்தகைய செயலைப் புரிந்த ஆள் இலங்கையில் சமுகமாயிருப்பின் ;

(ஆ) அத்தகைய செயல் இலங்கைப் பிரசையொருவரினால் அல்லது இச்சமவாயத்துக்கான திறத்தவரொருவராகவுள்ள இன்னோர் அரசின் நாட்டினத்தவரொருவரினால் அல்லது அவரது வழமையான வதிவிடத்தை இலங்கையில் கொண்டுள்ள நாடற்ற ஆளொருவரினால் புரியப்படின் ;

(இ) அத்தகைய செயல், தவறு புரியப்படும் நேரத்தில் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட ஒரு கப்பலுக்கெதிராக அல்லது வானூர்திக்கெதிராக அல்லது அதன்மீது புரியப்படின் ;

(ஈ) அத்தகைய செயல், தவறு புரியப்படும் நேரத்தில், இச்சமவாயத்துக்கான திறத்தவரொருவராகவுள்ள இன்னோர் அரசின் சட்டங்களின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு கப்பலுக்கெதிராக அல்லது வானூர்திக்கெதிராக அல்லது அதன்மீது புரியப்படின் ;

(உ) எந்த ஆள் தொடர்பாகத் தவறானது புரியப்பட்டதெனச் சார்த்தப்படுகின்றதோ அந்த ஆள் இலங்கைப் பிரசையொருவராகவிருப்பின் ;

(ஊ) அத்தகைய செயல், ஏதேனும் செயலைச் செய்வதற்கு அல்லது செய்யாது தவிர்ப்பதற்கு இலங்கை அரசாங்கத்தை வலுக்கட்டாயப்படுத்துவதற்கெனப் புரியப்படின் ;

(எ) ஓர் அரசின் ஏதேனும் இராசதந்திர அல்லது காவற்றூது வளவுகளுட்பட, வெளிநாட்டில் அமைந்துள்ள அத்தகைய அரசுக்கெதிராக அல்லது அவ்வரசின் அரசாங்க வசதியொன்றுக்கெதிராகப் புரியப்படின்; அல்லது

(ஏ) அத்தகைய செயல், இலங்கையின் ஒரு தூதராலய அல்லது வேறு இராசதந்திர அல்லது காவற்றூது வளவுகளுட்பட, இலங்கை அரசாங்கத்தினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட, குத்தகை கொடுக்கப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட ஏதேனும் ஆதனத்துக்கெதிராகப் புரியப்படின்,

அத்தகைய தவறு இலங்கையினுள் புரியப்பட்டது என்றாற் போன்று, அதனை விளங்குவதற்கு நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டும்.

*இச்சட்டத்தின் கீழான தவறுகளுக்காக கைது செய்யப்பட்ட குறித்த சில ஆட்களின் உரிமைகள்.*

**7.** இலங்கைப் பிரசையொருவரல்லாத ஆளொருவர் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்காக கைது செய்யப்பட்டவிடத்து, அத்தகையஆள் –

(அ) அவர் எந்த அரசின் நாட்டினத்தவரொருவராக இருக்கின்றாரோ அந்த மிகவும் அண்மையிலுள்ளதோதான அரசின் பிரதிநிதியுடன் அல்லது வேறு வகையில் அவரது உரிமைகளைப் பாதுகாக்கும் உரித்துடைய அல்லது அவர் நாடற்ற ஆளொருவராக இருப்பின் அவர் எந்த அரசின் ஆள்புலத்தில் வழமையாக வாழ்ந்து வந்தாரோ அந்த மிகவும் அண்மையிலுள்ள தோதான அரசின் பிரதிநிதியுடன் தாமதமின்றி தகவல் தொடர்புகொள்வதற்கும் ; அத்துடன்

(ஆ) அந்த அரசின் பிரதிநிதியொருவரால் பார்வையிடப் படுவதற்கும் ; அத்துடன்

(இ) பந்திகள் (அ) மற்றும் (ஆ) என்பவற்றின்கீழ் அவரது உரிமைகள் பற்றி அறிவிக்கப்படுவதற்கும்

உரித்துடையவராதல் வேண்டும்.

எந்த ஆட்களின் மீள ஒப்படைத் தலுக்கு வேண்டுகோள் விடுக்கப் படுகின்றதோ அந்த ஆட்களுக் கெதிராக எடுக்கப்பட்ட வழிமுறைகளை அமைச்சர் வேண்டுகோள் விடுக்கும் அரசுக்கு அறிவித்தல்.

**8.** இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் அல்லது அதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட தவறொன்றுக்கு குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனும் ஆளின் மீள ஒப்படைத்தலுக்கு சமவாய நாடொன்றின் அரசாங் கத்தால் அல்லது அதன் சார்பில் இலங்கை அரசாங்கத்திடம் வேண்டுகோளொன்று விடுக்கப்படுமிடத்து, அமைச்சர் இலங்கை அரசாங்கத்தின் சார்பில், அத் தவறுக்காக அத்தகைய ஆளுக்கெதி ரான குற்றவழக்குத் துடர்ச்சிக்கு அல்லது அவரை மீள ஒப்படைத்த லுக்கு இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள அல்லது எடுக்க உத்தே சிக்கும் வழிமுறைகளைப் பற்றி வேண்டுகோள் விடுக்கும் அரசின் அரசாங்கத்திற்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

சமவாய அரசு மற்றும் முதலிய வற்றுக்கு உதவுதல்.

**9.** (1) 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் ஏற்பாடுகள், அது 3 ஆம் பிரிவின் கீழான தவறொன்றின் அல்லது இச்சட்டத் தின் II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தவறொன்றின் புலனாய்வு அல்லது குற்றவழக்குத் தொடர்ச்சிக்கு அவசியமா கின்றவிடத்தெல்லாம், இலங்கை அரசாங்கத்திற்கும், ஒன்றில் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான கட்டளை மூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப்பட்ட பொதுநலவாய அரசு நாடுகளாகவுள்ள வேறு அரசுகளுக்குமிடையே அல்லது எந்தப் பொதுநலவாய அரசு நாடுகள் அல்லாத நாடுகளுடன் இலங்கை அரசாங்கம் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் நியதிகளின் படி உடன்படிக்கையொன்றை செய்திருக்கின்றதோ அவற்றிற்குமிடை யில் உதவிகளை வழங்குகின்றமை தொடர்பில் ஏற்புடையன வாதல் வேண்டும்.

(2) மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் கட்டளை மூலம் அமைச்சரால் குறித்துரைக்கப்பட்ட ஒரு பொதுநலவாய நாடு அல்லாததான ஒரு நாட்டின் அல்லது எந்தப் பொது நலவாய நாடு அல்லாத ஒரு நாட்டுடன் இலங்கை அரசாங்கம் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் நியதிகளின்படி உடன்படிக்கை ஒன்றை செய்துகொள்ளவில்லையோ அந்த நாட்டின் விடயத்தில், அப்போது ஐக்கிய நாடுகள் சமவாயத்தின்கீழ் அதனது கடப்பாடுகளின் சான்று மற்றும் கூற்றுகளை எடுத்தல் மன்றாணை சேர்ப்பித்தல் மற்றும் தேடுதல்களை நடாத்துதல்

*தொடர்பிலான உதவிகளை உள்ளடங்கல். நிறைவேற்றுவதற்கு தேவைப்படும் அளவிற்கு 3 ஆம் பிரிவின்கீழான தவறொன்றின் அல்லது இச்சட்டத்தின் 11 ஆம் அட்டவணையில் குறித்துரைக் கப்பட்ட தவறொன்றின் புலனாய்வுக்காக மற்றும் குற்றவழக்கு தொடர்வதற்காக அவசியமானதாக இருக்கக்கூடியவாறான சமவாய அரசொன்றுக்கு அத்தகைய உதவிகளை அளித்தல் அரசாங்கத்தின் கடமையாதல் வேண்டும் என்பதுடன் சமவாய நாடொன்றில் இருந்து எல்லா அத்தகைய உதவிகளையும் அமைச்சரூடாக வேண்டலாம்.*

*(3) சமவாய அரசொன்றிற்கு உதவிகளை வழங்குதல் ஆனது அமைச்சர் தகுதியானதென எண்ணக்கூடியவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய செய்யப்படலாம்.*

*சமவாய நாடுகளுடன் உளதாம் மீள ஒப்படைக்கும் ஒழுங்குகள் அட்டவணை II இலுள்ள தவறுகளுக்கு ஏற்பாடு செய்வதாகக் கருதப்படுதல்.*

***10.** இலங்கை அரசாங்கத்தினால் ஏதேனும் சமவாய அரசுடன் செய்துகொள்ளப்பட்ட மீளஒப்படைத்தல் ஒழுங்கொன்று இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று வலுவிலிருக்குமிடத்து, அத்தகைய ஒழுங்கு, 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தல் சட்டத்தின் நோக்கங்களுக்கு இச்சட்டத்தின் அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட தவறுகள் தொடர்பில் மீள ஒப்படைத்தலுக்கான ஏற்பாட்டையும் உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும்.*

*அமைச்சர் அட்டவணை II இல் குறித்துரைக் கப்பட்ட தவறுகள் தொடர்பில் சமவாயத்தை இலங்கைக்கும் குறித்த சில சமவாய நாடுகளுக்கு மிடையிலான மீளவொப் படைத்தல் ஒழுங்கொன்றாகக் கொள்ளலாம்.*

***11.** இலங்கை அரசாங்கத்தினால் ஏதேனும் சமவாய நாட்டுடன் மீள ஒப்படைத்தல் ஒழுங்கெதனையும் செய்துகொண்டிராத விடத்து, அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தின் நோக்கங்களுக்கு, சமவாயத்தை இச்சட்டத்தின் அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட தவறுகள் தொடர்பில் மீள ஒப்படைத்தலுக்கு ஏற்பாடுசெய்து இலங்கை அரசாங்கத் தினால் சமவாய நாட்டுடன் செய்துகொள்ளப்பட்ட மீள ஒப்படைக் கும் ஒழுங்கொன்றாகக் கருதலாம்.*

*1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்திற்கான திருத்தம்.*

**12.** ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டமானது அச்சட்டத்திற்கான அட்டவணையின் பாகம் 'ஆ' என்பதற்கு நேர்முன்னர் பின்வரும் விடயத்தை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(46) 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல்மீதான சமவாய சட்டத்தின் நோக்கெல்லைக்குட்பட்ட தவறொன்று.".

*மீள ஒப்படைத்தற் சட்டத்தின் நோக்கங்களுக்காக இச்சட்டத்தின் கீழான குற்றங்கள் அரசியல் குற்றங்கள் முதலியன வாகாது.*

**13.** 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க மீள ஒப்படைத்தல் சட்டத்தில் எது எப்படியிருப்பினும், அச்சட்டத்தின் அட்டவணையிலும் இச்சட்டத்தின் அட்டவணை II இலும் குறித்துரைக்கப்பட்ட தவறொன்று, அச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, இலங்கை அரசாங்கத்திற்கும் ஏதேனும் சமவாய அரசுக்கும் அல்லது 9 ஆம் பிரிவின்கீழ் சமவாய அரசொன்றிற்கு உதவியளிக்கின்ற அரசாங்கத்திற்கும் இடையிலான அத்தகைய ஏதேனும் தவறிற்கு குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்ட எவரேனும் ஆளின் மீள ஒப்படைத்தலின் நோக்கங்களுக்காக மட்டும் அரசியல் குணநலங்கொண்ட தவறொன்றாக அல்லது அரசியல் தவறொன்றுடன் தொடர்புபட்ட தவறொன்றாக அல்லது அரசியல் உள்நோக்கத்தினால் ஊக்கமளிக்கப்பட்ட தவறொன்றாக இல்லாததாகக் கருதப்படுதல் வேண்டும்.

*இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறை அல்லது பணம் தூய்தாக்கல் தவறைத் தடுத்தற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல்.*

**14.** மூன்றாம் பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட தவறுகளைத் தடுப்பதில் சர்வதேச ஒத்துழைப்பை முன்னெடுத்தற்காக வெளிநாட்டு அலுவல்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர், எந்த அமைச்சருக்கு பணம் தூய்தாக்கல் என்னும் விடயம் ஒதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தவறை அல்லது பணம் தூய்தாக்கல் தவறொன்றை தடுக்கின்ற அல்லது எதிர்த்து சமாளிக்கும் நோக்கத்திற்காக அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் வேறு எழுத்திலான சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றவாறாக அத்தகைய ஒழுங்குவிதிகளை ஆக்கலாம், அத்தகைய பணிப்புகளை வழங்கலாம் அல்லது அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கலாம்.

*அமைச்சர் பணிப்புரைகளை வழங்குதல்.*

***15.*** *அமைச்சர், சமவாயத்தின் கோட்பாடுகளையும் ஏற்பாடுகளையும், அவை இச்சட்டத்தில் உள்ளடங்கும் அத்தகைய அளவுவரை, நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமாகக்கூடிய வாறான அத்தகைய பொதுவான அல்லது விசேடமான பணிப்புரைகளைக் காலத்திற்குக்காலம் வழங்கலாம்.*

*ஒழுங்கு விதிகள்.*

***16.*** *(1) இச்சட்டத்தின் கோட்பாடுகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக அல்லது இச்சட்டத்தின்கீழ் எக்கருமம் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அவ் ஏதேனும் கருமத்துக்காக அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.*

*(2) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.*

*(3) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் வசதிப்படக்கூடியளவு விரைவாக அங்கீகாரத்திற்கெனப் பாராளுமன்றத்தின் முன்கொணரப்படுதல் வேண்டும் அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதியெதுவும் அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.*

*(4) அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதி பற்றிய அறிவிப்பு ஒன்று கசெற்றில் வெளியிடப்பட வேண்டும்.*

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.*

***17.*** *இச்சட்டத்தின் தமிழ் உரைக்கும், சிங்கள உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.*

## அட்டவணை I

(பிரிவு 3)

1. 1970 திசெம்பர் 16 ஆம் தேதியன்று ஹேக்கில் செய்யப்பட்ட வானூர்தியை சட்டவிரோதமாகக் கைப்பற்றுதலை ஒடுக்குதலுக்கான சமவாயம்.

2. 1971 செத்தெம்பர் 23 ஆம் தேதியன்று மொன்றியலில் செய்யப்பட்ட சிவில் விமானப் போக்குவரத்தின் பாதுகாப்பிற்கெதிரான சட்டவிரோதச் செயல்களை ஒடுக்குவதற்கான சமவாயம்.

3. 1973 திசெம்பர் 14 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட, இராசதந்திர முகவர்கள் உட்பட சர்வதேச ரீதியில் பாதுகாக்கப்பட்ட ஆட்களுக்கெதிரான குற்றங்களைத் தடுத்தல் மற்றும் தண்டித்தல் பற்றிய சமவாயம்.

4. 1979 திசெம்பர் 17 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட பணயக் கைதிகளை எடுத்தலுக்கெதிரான சர்வதேசச் சமவாயம்.

5. 1980 மாச்சு 3 ஆம் தேதியன்று வியன்னாவில் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட அணுச் சக்திப் பொருளின் உருப்படி ரீதியிலான பாதுகாப்பு பற்றிய சமவாயம்.

6. 1988 பெப்புருவரி 24 ஆந் தேதியன்று மொன்றியலில் செய்யப்பட்ட சிவில் விமானப் போக்குவரத்தின் பாதுகாப்பிற்கெதிரான சட்டவிரோதச் செயல்களை ஒடுக்குதலுக்கான சமவாயத்திற்குக் குறைநிரப்பியாகிய சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்துக்கு சேவையாற்றும் விமான நிலையங்களில் சட்டவிரோதமான வன் செயல்களை ஒடுக்குதலுக்கான உடன்பாடு.

7. 1988 மாச்சு 10 ஆம் தேதியன்று உரோமில் செய்யப்பட்ட கடற்றுறை கலமோட்டல் பாதுகாப்பிற்கெதிரான சட்டவிரோதச் செயல்களை ஒடுக்குதலுக்கான சமவாயம்.

8. 1988 மாச்சு 10 ஆம் தேதியன்று செய்யப்பட்ட கண்டவோட்டின் மீது அமைந்துள்ள நிலையான நிலை மேடைகளின் பாதுகாப்பிற்கான சட்டவிரோதச் செயல்களை ஒடுக்குதலுக்கான உடன்பாடு.

9. 1997 திசெம்பர் 15 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட பயங்கரவாதி குண்டுத் தாக்குதலை ஒடுக்குவதற்கான சர்வதேச சமவாயம்.

## அட்டவணை II

*(பிரிவுகள் 8, 9, 10, 11, 13)*

(1) நிதிகள் –

(அ) இச்சட்டத்திற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட பொருத்தனைகளுள் ஏதேனும் ஒன்றின் நோக்கெல்லைக்குட் பட்ட அல்லது வரைவிலக்கணத்திற்குட்பட்ட தவறொன்றாக அமைகின்ற செயலொன்றை ;

(ஆ) ஆயுதமேந்திய மோதல் நிலையமொன்றில், பொதுமகன் ஒருவருக்கு அல்லது பகைமைகளில் தீவிர பங்கெடுக்காத வேறு எவரேனும் ஆளுக்கு மரணத்தை அல்லது பார தூரமான உடல் ஊறுபாட்டை விளைவிப்பதற்கு உட்கருத்துக் கொண்ட வேறு ஏதேனும் செயலைப் புரிவதற்கு

முழுமையாக அல்லது பகுதியளவில் பயன்படுத்தப்படவேண்டும் என்ற உட்கருத்துடன் அல்லது அவை பயன்படுத்தப்படவுள்ளன அல்லது பயன்படுத் தப்படும் சாத்தியமுள்ளதென நம்புவதற்குக் காரணமுள்ளது என அறிந்து கொண்டு அத்தகைய நிதிகளைச் சட்டவிரோதமாகவும் வேண்டுமென்றும் வழங்குதல் அல்லது சேகரித்தல் அத்துடன் அத்தகைய செயலின் நோக்கம், அதன் தன்மையினாலும் சந்தர்ப்பதினாலும் ஏதேனும் செயலைச் செய்வதற்கு அல்லது செய்யாது தவிர்ப்பதற்கு குடிசனத்தை அச்சுறுத்துவதாக அல்லது ஓர் அரசாங்கத்தை அல்லது சர்வதேச ஒழுங்கமைப்பை வலுக்கட்டாயப் படுத்துவதாகும்.

(2) ஓராம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட தவறைப் புரிய எத்தனித்தல்.

(3) ஓராம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட தவறைப் புரிவதற்கு உதவுதல் அல்லது உடந்தையாயிருத்தல்,

(4) வேறோர் ஆளுடன் அல்லது ஆட்களின் குழுவொன்றுடன் பொது நோக்கமொன்றுடன் செயற்படுதலும் (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட தவறைப் புரிவதற்குப் பங்களிப்புச் செய்தலும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்